**Starting time 11.33A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 240/2015**

Deposition of **<u>D.W.2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 26.02.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பழனிச்சாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>** என்னுடைய சொந்த ஊர் பைத்தூர் என்றால், ஆமாம். என்னுடைய மகளை 8-ஆம் பிரதிவாதி மகன் மணிக்கு கொடுத்துள்ளேன் என்றால், ஆமாம். என்னுடைய மகளுக்கு எந்த வருடத்தில் திருமணமானது என்றால், 40 வருடங்களுக்கு மேல் இருக்கும். 8-ஆம் பிரதிவாதி நிலம் வாங்கிய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால், ஆமாம். நிலத்தை விற்ற மாரிமுத்துவிற்கு எத்தனை மகன்கள் மகள்கள் என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியும். குமார், பழனியம்மாள், செல்வி, மல்லிகா, ஐயம்மாள், செல்வம், அய்யனார். மொத்தம் 7 பேர்.

2. 8-ஆம் பிரதிவாதி நிலம் வாங்கியபோது வாதிக்கு எவ்வளவு வயது என்றால், எனக்கு தெரியாது, அப்போது அவர் இளவராக இருந்தர். 8-ஆம் பிரதிவாதி வாங்கியுள்ள நிலத்தில் புல எண் என்னவென்றால், 295/10. அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 37-1/2 செண்ட். எவ்வளவு விலைபேசி நிலம் வாங்கப்பட்டது என்றால், 70 ஆயிரத்துக்கு வாங்கினார்கள். கிரய தொகையை எவ்வாறு செலுத்தினார்கள் என்றால், கிரய ஒப்பந்தம் செய்யும்போது 25 ஆயிரம் ரூபாயும், மீதி தொகை கிரயத்தின் போதும் செலுத்தப்பட்டது. 8-ஆம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து அவருக்கு கிரயம் கொடுத்த நபரான மாரிமுத்துவுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது

என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

3. மாரிமுத்து பெயரிலிருந்த மூல ஆவணத்தை கிரயத்தின் போது வாங்கினாரா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. கிரயம் பேசிய போது உடன் யார் இருந்தார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. கிரயத்தின் போது இளவராக இருந்த வாதி பெயருக்கு வங்கியில் தொகை வைப்பீடு செய்யப்பட்டதா என்றால், கல்வி செலவிற்கும், அவர்களது செலவிற்கும் சேர்த்துதான் கிரயம் கொடுப்பதாக கூறினார்கள். அதனால் இளவர் வாதிக்கு வங்கியில் பணம் எதுவும் வைப்பீடு செய்யவில்லை என்றால், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

4. இளவர் வாதிக்கு உரிமையுள்ள சொத்தை கிரயம் பெற்றதால் நீதிமன்றத்தில் முன் அனுமதி பெற்றோமா என்றால், அவரது தகப்பனார் தான் கிரயம் கொடுத்தார், முன் அனுமதி பெற்றார்களா என்று எனக்கு தெரியாது. மாரிமுத்துவிற்கு குடிப்பழக்கம் உண்டு என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. மாரிமுத்துவிடம் கிரய ஒப்பந்தத்தின் போது 25 ஆயிரம் ரூபாயும், கிரயத்தின் போது பாக்கித் தொகையும் கொடுத்ததாக நான் கூறுவதே தவறு என்றாலும், மாரிமுத்துவிற்கு உள்ள குடிப்பழக்கத்தை பயன்படுத்தி அவருக்கு சிறுக சிறுக பணம் கொடுத்து சொத்தை 8-ஆம் பிரரதிவாதி எழுதி வாங்கிக் கொண்டார் என்றால், சரியல்ல.

5. வாதிக்கு தாவா சொத்தில் 64/9 பாகம் இருக்கிறது என்றால், இளவருக்கும் சேர்த்துதான் மாரிமுத்து கையெழுத்து போட்டார், அதனால் வாதிக்கு பங்கு இல்லை. 8-ஆம் பிரதிவாதியின் கிரய ஆவணத்தில் இளவரின் கல்வி செலவு, பராமரிப்பு செலவு குறித்து எதுவும் எழுதவில்லை என்றால், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. இளவரின் பாகத்தையும் சேர்த்து கிரயம் கொடுக்கப்பட்டுள்ளதால் அந்த கிரயமே செல்லாது என்றால், சரியல்ல. 8-ஆம் பிரதிவாதி ராமசாமி எனக்கு சம்மந்தி என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 11.45 A.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**